களைக் கவனிப்பதும், வார்டுகளின் சௌகரியங்களைக் கவனிப்பதுமாகிய பணிகளிலே ஈடுபடுகிறார்கள். எனவே அவர்கள் நோயாளிகளை மட்டும் கவனிக்கின்ற பணியிலே ஈடுபடுத்தப்பட்டு மற்றப் பணிகளை மற்றவர்களுக்குக் கொடுக்கின்ற முறையிலே அவர்களுடைய பணிகளைக் குறைத்தால் நல்லது என்ற முறையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌளந்திரராஜன்: தலைவர் அவர்களே, செவிலியர்கள் ஆற்றவேண்டிய பணிகளை அவர்கள் ஆற்றுகிறார்கள். செவிலியர்களுக்குத் துணையாக அவர்களுக்கு உதவியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள்தான் அந்தப் பணிகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அந்தப் பணிகளையும் செவிலியர்கள் செய்துகொண்டிருக்கவில்லை என்பதை அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, நர்ஸ்களுக்கு 8 மணி நேரத்திற்கு மேல் வேலை கொடுக்கப்படுகிறது என்ற நிலைமை இருக்கிறது என்பது தெரிகிறது, ஆகவே அந்த 8 மணி நேரத்திற்கு மேலே அவர்கள் வேலைசெய்கிறபோது அதற்காக ஸ்பெஷல் அலவன்ஸ் அல்லது ஓவர் டைம் அலவன்ஸ் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, கேள்வி கேட்டு இருப்பவர் முன்னாள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆவார்கள். அவர்களுக்கு இதுபற்றி நன்றாகப் புரியும் என்று கருதுகிறேன். அந்தக் காலத்திலேயிருந்து செவிலியர்கள் குறைபாடு இருந்துவந்திருக்கிறதே தவிர இந்த அரசு வந்ததற்குப் பிறகு வந்ததல்ல என்பதை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். செவிலியர்களுக்கு, அவர்களுடைய பணிகளுக்கு உரிய நல்ல நடவடிக்கையை எடுக்க அரசு முன் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றியங்களில் கால்நடைக் கண்காட்சிகள்.

*வினா எண் 257—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒன்றிய அளவில் ஆண்டு தோறும் கால்நடைக் கண்காட்சிகள் நடைபெற்று வந்தது கைவிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

REPORTING SECTION

1979 மார்ச் 6]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :—

(அ) இப்பொழுது ஒன்றிய அளவில் நடத்தப்படாது மாவட்ட அளவிலும் வட்டார (Region) அளவிலும் கால்நடைக் கண்காட்சிகள் கால்நடை பராமரிப்புத் துறையினரால் நடத்தப் படுகின்றன.

(ஆ) மாவட்ட/வட்டார அளவில் கால்நடைக் கண்காட்சி கள் நடத்தப்படுவதால், ஒன்றியங்களின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு ஒன்றிய அளவில் கால்நடைக் கணகாட்சிகள் நடத்துவது தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, ஒன்றிய அளவிலே இந்தக் கால்நடைக் கண்காட்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன, அதை இப்போது அரசாங்கம் நிறுத்திவிட் டிருக்கிறது. அந்த விவசாயிகளே இந்தக் கால்நடைக் கண் காட்சிகளை ஒன்றிய அளவிலே நடத்தினால் அவர்களை ஊக்கு விப்பதாக இருக்கும் என்ற காரணத்தால்—இன்றைய தினம் கோழி, ஆடு போன்ற மாமிசங்களின் விலைகள் ஏறியிருக்கின் றன. இதை அரசாங்கம் கருத்திலே கொண்டு—அந்தக் கண்காட்சி களை ஒன்றியத்தின் பொதுநிதியிலிருந்தாவது கொடுத்து நடத்தி அந்த விவசாயிகளை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, கேந்திர கிராம வளர்ச்சித் திட்டத்தின் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக கால்நடைக் கண்காட்சி அவ்வப்போது மாவட்ட அளவில் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. அண்மையில் மதுரையிலே நடைபெற்ற கண்காட்சி யிலும் சென்ற அக்டோபர் மாதத்திலே நீலகிரி மாவட்டத்திலே நடைபெற்ற ஊட்டி கண்காட்சியிலும் மாண்புமிகு முதல்வர் அவர்களே கலந்து கொண்டார்கள்.

(முற்பகல் 10—00)

அப்படிச் சிறப்பாக ஏற்பாடுகளைச் செய்யும் போது ஒன்றிய அளவில் ஏற்படுகின்ற கூட்டங்களைவிட மாவட்ட அளவில் கால் நடைக் கண்காட்சிகளை நடத்துவதால் விவசாயிகள் பெருமளவில் பங்கு கொள்கிறார்கள், பல்வேறு திட்டங்களின் கீழ் பயன் பெறு கிறார்கள். எனவே ஒன்றிய அளவில் நடத்த அவசியமில்லை என்று இந்தத் துறை கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]